# அறநெறி அமுதம்

ஆன்மீக - விழுமியக் காலாண்டிதழ்



ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்
ஞாயிறு சமய பாடசாலை

அமுதம் 1 துளி 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த இதழில்...


| பக்கம் | தலைப்பு | - | எழுதியவர் |
|---|---|---|---|
| 1. | சமர்ப்பணம் | | |
| 2. | ஆசிரியர் உரை | | |
| 3. | ஆசியுரை | | |
| 4. | மானிடா!... கேள்! | - | க. கஜவதனி, ஆண்டு 9 |
| 5. | நாமும் பயில்வோம் | - | ந. ஜெயராம், ஆண்டு 10 |
| 6. | ஏன் முடியாது? | - | பா. சுகன்யா |
| 8. | சுவாமிஜியினது சொற்பொழிவின் சிறப்பியல்பு | - | இராமகிருஷ்ண விஜயம் |
| | | - | ஆனி 1995 |
| 11. | சத்சங்கத்தில்... | - | தொகுப்பு க.கவிதா ஆண்டு 12 |
| 13. | சித்திரக்கதை சந்தனக்காடு என்ன ஆச்சு | - | மூலம் - கிருபானந்தவாரியார் |
| | | - | படம் - ஜெகேந்திரா, தொண்டர் |
| | | - | வசனம் - தொண்டர் |
| 17. | நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை - தொண்டர் | | |
| 18. | இறைவனைக் கண்டதுண்டா ?- | | நியோமி, ஆண்டு 8 |
| 19. | எம் கதி என்ன ? | - | சிந்துஜா |
| 20. | ராமகிருஷ்ண குடும்பம் | - | தொண்டர் |
| 22. | கடிதத்திலிருந்து... | - | தொகுப்பு தொண்டர் |
| 23. | நிகழ்ச்சிகள் | | |
| 24. | சீலத்தின் நிர்மாணம் | | |



இதழாசிரியர்கள் : ந. ஜெயராம்
அ. காயத்ரி
செ. தாட்சாயணி

இதழமைப்பு : இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை, மாணவர்கள் ஆசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஸ்வர:
குரு:சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ — தர்ம — ஸ்வரூபிணே
அவதார — வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே நம:

ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத்குரும்
பாதபத்மே தயோ: ச்ரித்வா ப்ரணமாமி முஹுர் முஹு:

நம: ஸ்ரீயதிராஜாய விவேகானந்த ஸூரயே
ஸத் சித் சுக ஸ்வரூபாய ஸ்வாமினே தாபஹாரிணே

வித்தக மேன்மை கொள் விடி விளக்காய்
சத்திய நெறி அமுதம் வடிக்க விழைகிறோம்
ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவர்
தூய அன்னை சாரதா தேவியார்
வீரத்துறவி விவேகானந்தர்
பாதக்கமலங்களில் இந்நூல் – அறநெறி அமுதம் சமர்ப்பணம்!
வையகமும் வானகமும் வெய்யோன் வெங்கதிரும்
வேய்ங்குழல் வேந்தனின் வாயுறை வாக்கியமும்
விந்திய வியப்புகளாய் வையகத்து வாழும்
இன்னுயிர்களுக்குச் சமர்ப்பணம்

திகதி 01.01.2001 (கற்பகதரு தினம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மனதிலிருந்து...



ஓதுதல், ஒழுகுதல், ஓதுவித்தல், என்பதற்கிணங்க, பல அருமையான நூல்களில் பொதிந்து கிடக்கும் ஆக்கங்களைத் திரட்டியெடுத்து அவற்றை மீண்டும் புதுப்பொலிவுடன் மக்களிடையே, முக்கியமாக எமது மாணவ சமுதாயத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கும் சிறு முயற்சியே இந்த அறநெறி அமுதம் !

எமது சமயத்திலே தோன்றிய மகாபுருஷர்கள், தெய்வீகமான மனித வாழ்க்கைக்காகவென விட்டுச்சென்ற நற்கருத்துக்கள் பல புத்தகங்களினுள்ளே புதைந்து கிடக்கின்றன. அவற்றை நமது மாணவர்களும் தேடிக் கற்கத்தூண்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைவது மட்டுமல்லாமல், தாம் கற்றறிந்து திரட்டிய முத்துக்களைக் கோர்த்து இதழ் எனும் ஆரமாக வெளிக்கொணர்வதற்கும் வழிவகுக்கின்றது. அத்துடன் இப்புத்தக வடிவமைப்பு, எமது மாணவர்களாலேயே இந்நவீன காலத் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்திப் பிறரும் பயன் பெறத்தக்க ஆக்கமாகக் கொண்டு வர எடுக்கப்பட்ட ஒரு கூட்டுமுயற்சியாகும்.

இறுதியாக, சிறியவர் எம்மால் செதுக்கப்பட்ட இவ்வேட்டிலே நவை பொறுத்து, சுவை ஏற்பீர் எனக் கேட்டு, எம் இச்சிறு தொண்டு, கடந்தகாலக் கனவாகி விடாது தொடரக் கலங்கரை விளக்காய் குருதேவர், அன்னை, சுவாமிஜி ஆகியோரின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வணக்கம்

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் அமுதங்கள்

ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள்

அறநெறி அமுதம் வாரிப் பொழிக.- சுவாமி ஜீவனானந்தஜி

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திருவருளை முன்நிறுத்தி வெளிவரும் இச்சஞ்சிகையானது அனைத்து அறநெறிகளினதும் மேலான கருத்துக்களை அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமுதவாரியாக அள்ளி வழங்க வேண்டுமென எம்பிரான் திருவருளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிக மகிழ்ச்சி. - சுவாமி ராஜேஸ்வரானந்தஜி

எமது ஞாயிறு சமய பாடசாலைக் குழந்தைகள் வெளியிடும் 'அறநெறி அமுதம்' கண்டு மிக மகிழ்ச்சி. பகவான் ஸ்ரீ ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கு அருள் புரிந்து வழிநடத்த வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

Swami Rajeswaranam

அமுதமாய் இனிக்கட்டும் - சுவாமி ஆத்மகனானந்தஜி

எமது ஞாயிறு சமய பாடசாலை மாணவர்கள் 'அறநெறி அமுதம்' என்ற காலாண்டிதழ் ஒன்றைத் தொடர்ந்து வெளியிட முன்வந்துள்ளதை அறிந்து அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். அவர்களது நன்முயற்சி வெற்றி பெற, குருதேவரது திருவருளைப் பிரார்த்திக்கிறோம். 'அறநெறி அமுதம்' அமுதமாய் இனிக்கட்டும்!

கரங்களை அலங்கரிக்கட்டும்

கொழும்பு ஞாயிறு சமயப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய 'அறநெறி அமுதம்' என்னும் காலாண்டுப் பத்திரிகையொன்று வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி. ஒவ்வொரு மாணவர்களின் கரத்தையும் அலங்கரிக்கும் 'அறநெறி அமுதம்' சிறப்பாக வெளிவர வாழ்த்துக்கள்.

ஒளியைத் தரட்டும்....

"எனது அருமைக்குழந்தைகளே! முன்னேறிச் செல்லுங்கள். புரந்த இந்த உலகம் ஒளியை வேண்டுகிறது." என்று சுவாமி விவேகானந்தர் கூறுவது போல் இந்த சஞ்சிகையும் உலகத்திற்கு ஒளியைத் தரும். அதற்கு எல்லாம் வல்ல திரி மூர்த்திகள் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

சின்மயா மிஷன் சுவாமிகள்

ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம்

"அறநெறி அமுதம்" சிறப்பாக வெளிவர, எனது வாழ்த்துக்கள். இப்புத்தகத்தின் மூலம் இந்து மதத்தின் ஆழ்ந்த கருத்துக்களை, இலங்கை மக்களிடையே வெளிக்கொணர்வது மிகவும் உபயோகமானது எனக்கருதுகிறேன். எல்லாம் வல்ல இறைவன் இப்புதிய முயற்சிக்கு அருள்புரிவாராக.

ஹரி ஓம்

இந்த முயற்சி உங்கள் அனைவரின் உள்ளங்களையும் மேன்மைப்படுத்த விநாயகப் பெருமான் அருள்புரிவாராக. ஓம் தத் சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடா...! கேள்...



இன்று புதிய நூற்றாண்டு உதித்துள்ளது. ஆனால்... மனிதனின் ஆன்மீகமோ வளர்ந்ததாகத் தெரியவில்லை. மாறாக அருகி வருவதையே காணக் கூடியதாக உள்ளது. மதங்கள் மனிதனின் ஆன்ம ஈடேற்றத்துக்காக உருவாக்கப்பட்டவை. ஆனால் காலப்போக்கில் மதங்களே மனிதனை மதம் பிடிக்க வைக்கும் கருவிகளாகுமோ! என்ற அச்சம் எழுகின்றது.

மானிடா...! நீ ஆறறிவுள்ள ஜீவன் காட்டில் அலைந்து திரிந்த காலம் மலையேறி விட்டது. ஆனால் அன்று வில் யுகமாய் இருந்த காலம் இன்று ஷெல் யுகமாகியுள்ளது. சமாதானத்தை உனது சின்னமாக்கி நீ வாழவேண்டிய நேரம் வந்து விட்டது.

'இணைந்து நின்ற கரங்கள் எல்லாம் — இந்த
இளைய உலகில் பிரிவது ஏன்?
புணைந்து நாமும் வாழ்ந்தால்த்தான் — நமக்கும்
பழைய அறங்கள் ஏறிடுமே"

என்பதைப் புரிந்துகொள். நீ மகாத்மாவாகா விட்டாலும் பரவாயில்லை. மிருகமாகாதே. மானிடா...! நீ சமத்துவத்தையும், அன்பையும் நாடிச்சென்றால், இறைவன் உன்னை நாடி வருவான். ஒற்றுமை என்பது உனது உயிர் நாடி.

"இலக்கியம் கூறும் மலர்ச்சியுடன்
நலமொடு சமூகம் மகிழ்வாகும்!
நிலைதனில் உயர்ந்த ஒற்றுமையே — அந்
நிலை தனை மனதில் உருவாக்கும்!

என்பதை நீ உணர்ந்துகொள்!

இளைஞர்களே! யுவதிகளே! விழித்தெழுங்கள் போரிட அல்ல! சமத்துவத்தை நிலைநாட்ட! ஆன்மீகப் பாதையில் ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் இனி நவ சுதந்திர விவேகானந்தர்களாகட்டும்!

ஓங்குக ஒற்றுமை! பொங்குக சமாதானம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் பயில்வோம்

## யோகம்.



பெரும்பாலான மக்கள் யோகக்கலையை வெறும் உடற்பயிற்சியோடு மட்டும் சம்பந்தப்படுத்திப் பார்க்கிறார்கள், இக்கருத்து முற்றிலும் தவறானதாகும்.

உடல்,மனம்,உயிர் அல்லது ஆன்மா என்ற மூன்றையும் ஒருங்கிணைத்து, மனிதனது பரிணாம வளர்ச்சியைச் சிறந்த உயர்வான படிகளுக்கு இட்டுச்செல்லும் உன்னதக்கலையே யோகக்கலை ஆகும். யோகம் என்னும் சொல் இந்தோ — ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில் 'யுக்' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்தது ஆகும். 'யுக்' என்றால் இணைத்தல் என்று பொருள்.

வெளிமனதை — உள், ஆழ் மனங்களை, இணைக்க யோகக்கலை உதவுகிறது எனக்கொள்ளலாம். யோகக்கலையின் முக்கிய நோக்கம் தன்னை முழுமையாக உணர்தலும், தன்னை முழுமையாக அறிதலுமே ஆகும். ஆனால், இன்றைக்குப் பெரும்பாலானோர் யோகக்கலை உடல் நலத்திற்கு மட்டும் உதவுகிறது என எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். இது மிகத்தவறான கருத்தாகும்.


தன்னை உணர்தல்/அறிதல் என்னும் இலக்கை நோக்கிச் செல்லும் இலட்சியப் பாதையில் விளையும் பக்க விளைவுகளே, நல்ல உடல்நலமும், மனநலமும் ஆகும்.

யோகக்கலை, சமூக ஒழுக்கங்கள் (யமம்), தனிமனித ஒழுக்கங்கள் (நியமம்), உடற்பயிற்சி நிலைகள் (ஆசனம்), மூச்சுப்பயிற்சி (பிராணயாமம்), விலகி உள்ளிறங்குதல் (பிரத்தியாகாரம்), உள்நோக்குதல் (தாரணை), சிந்தையை ஒரு பொருளில் வைத்தல் (தியானம்), பரிணாமத்தில் உயர்நிலை (சமாதி) என்னும் எட்டுப்பகுதிகளைக் கொண்டது யோகம் ஆகும்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் முடியாது?



முயற்சி திருவினையாக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. இந்த உலகில் எந்த விடயமும் முயற்சியின்றிக் கிடைப்பதில்லை. முயற்சியின்றி வெற்றியை நினைப்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போலல்லவா ஆகிவிடும். வெற்றி எனும் கூரையை அடைய உதவும் ஏணியின் படிகள் முயற்சியினாலேயே ஆக்கப்பட்டுள்ளன. ஏணி இல்லாமல் கூரையை அடைய முடியுமா? முடியாது.

தாகத்திற்குத் தண்ணீர் குடிப்பதற்குக் குறைவாக இருந்த நீர்மட்டத்தை, கற்களை இட்டு உயர்த்திய காகத்தின் கதையை அறிந்திருக்கிறோம். ஓர் ஐந்தறிவு ஜீவனுக்கு இவ்வளவு முயற்சி இருப்பின் மனிதர்களுக்கு எத்தகைய முயற்சி இருக்க வேண்டும்?

முயற்சியை விளக்க இன்னொரு கதையும் உண்டு. ஒரு நாட்டு அரசன் மிக மோசமாகத் தோற்கடிக்கப்பட்டு குகை ஒன்றிலே சென்று ஒழிந்தான். அவனது படைகள் யாவும் சிதறடிக்கப்பட்டுவிட்டன. மிக்கத் துன்பத்துடனும், கவலையுடனும் பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த மன்னனைச் சிலந்தி ஒன்று கவர்ந்தது. அந்தச் சிலந்தி வலையைப் பின்னுவதற்காகக் குகையின் கீழிருந்த கல்லொன்றிலிருந்து மேலே உள்ள கல்லொன்றிற்குச் செல்ல முனைந்து கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது. எனினும் அது தளரவில்லை. இறுதியில் தனது பதின்மூன்றாவது முயற்சியில் அது வெற்றி பெற்றது. மனம் தளர்ந்திருந்த மன்னனின் உள்ளத்தில் புத்துணர்ச்சியைத் தருவித்தது. ஐந்தறிவு கொண்ட விலங்குகளே இப்படி முயற்சியைக் கைவிடாது கடைப்பிடிக்குமாயின் நாம் பின்பற்றுவதில் என்ன நட்டம்? என எண்ணி அவனும் அந்தச் சிலந்தியைப் போலப் பல தடவைகள் முயற்சித்து வெற்றி பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ்வுலகில் செயற்கரிய பல செயல்களைச் செய்து அரும்பெரும் சாதனைகளைப் புரிந்த ஆன்றோர்களின் வாழ்க்கையும் நமக்கு நல்ல படிப்பினையே. உலகிற்கு ஒளி தரும் மின்குமிழைக் கண்டுபிடித்தவர் தோமஸ் அல்வா எடிசன். மின்குமிழினுள் பிரயோகிக்கப்படும் அதியுயர் வெப்ப சக்தியைக் கொள்ளக்கூடியது தங்குதன் இழையே. எடிசன் இவ்விழையைக் கண்டறிய முன் ஏறத்தாழப் பத்தாயிரம் வெவ்வேறு விதமான இழைகளைப் பயன்படுத்திப் பரிசோதனை செய்தார். பத்தாயிரம் முயற்சிகளுக்குப் பின்புதான் வெற்றி அவர் வசமானது. அவர் மாத்திரம் முதல் இரண்டு பரிசோதனைகளிலேயே தனது முயற்சியைக் கைவிட்டிருப்பாரேயானால், இன்று உலகு இருளில் மூழ்கியிருக்க வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டிருக்கக் கூடுமன்றோ!

புத்திசாலித்தனம் என்பது, பத்து வீதம் அறிவு தொண்ணூறு வீதம் முயற்சி என்று ஆன்றோர் கூறுவர். எனவே இன்று முதல் அவ்வாறு அறிவுடன், முயன்று உயர்வு பெறுவோம்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்... நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

– சுவாமி விவேகானந்தர் –



ஆசிரியர் - அற்ப விஷயங்களிலும் பயனுள்ள அர்த்தத்தைப் பெறுவது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கோ!

மாணவர் - அதாவது நீங்கள் படிப்பிப்பதிலிருந்து பரீட்சைக்குக் குறிப்பு எடுப்பது போல..... சரியா சேர்!



சீடன் - குருவே உங்களைப் போன்ற ஒரு குருவை நான் பார்த்ததே இல்லை!

குரு - உன்னைப் போன்ற அலட்டல் சீடனை நான் பார்த்ததில்லை.

# சுவாமிஜியினது சொற்பொழிவின் சிறப்பியல்பு!



சுவாமி விவேகானந்தர் தான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், உயர்ந்த ஆன்மீக நிலையிலிருந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துவது வழக்கம். எனவேதான் அவரது சொற்பொழிவுகளில் ஓர் ஆன்மீக ஆற்றல் பொதிந்திருக்கிறது.

1899ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு நாள் லெக்கட் அம்மையார் தமது தோழியோடு சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்கச் சென்றார். சுவாமிஜி சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதைக் கேட்டவர்களின் மனங்களும் உயர்ந்த ஆன்மீகத் தளத்திற்கு உயர்த்தப்பட்டது. எனவே அவர்கள் சொற்பொழிவு முடிந்து வீட்டுக்குப் புறப்படும் போது, தங்கள் நாட்டு வழக்கப்படி ஒருவருக்கு ஒருவர் 'குட் — பை' சொல்லக்கூட மறந்துவிட்டார்கள்.

அதற்குக் காரணம், பேசுவதன் மூலம் சுவாமிஜி ஏற்படுத்திய ஆன்மீகச் சூழ்நிலையை இழந்துவிட விரும்பாததுதான்.

அன்றிரவு லெக்கட் அம்மையார் தமது தோழியைக் காணச் சென்றார். தோழி தன் அறையில் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

அதற்கான காரணத்தை அம்மையார் விசாரித்தபோது தோழி, "சுவாமிஜி எனக்கு நித்தியமான, அழியாத பேரின்ப வாழ்க்கையைக் காட்டியிருக்கிறார்..." என்று கூறினாள்.

சுவாமி அபேதானந்தர் தமது மலரும் நினைவுகளில் சுவாமிஜியின் சொற்பொழிவைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார், "ஒரு சமயம் சுவாமிஜியின் சொற்பொழிவை நான் கேட்டுக் கொண்டிருந்தேன், அப்போது ஆழ்ந்த தியானத்தில் நிகழ்வதுபோல் என்னுடைய குண்டலினி சக்தி தூண்டப்பட்டது."

மற்றொரு சமயம், சுவாமிஜி அமெரிக்காவில் பகவத்கீதையைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதைப்பற்றி மேக்லவுட் அம்மையார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்கும்போது உடல், காலம், இடம் போன்ற எல்லைகளுக்கு அப்பால் நாம் அழைத்துச் செல்லப்படுவதை உணர முடியும்" என்று கூறியுள்ளார்.

ஒரு நாள் காலை பத்துமணியிலிருந்து மாலை நான்கு மணி வரையில் சுவாமிஜி ஆன்மீகம் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அதைப் பற்றி மீட்ஸ் சகோதரிகள், "சுவாமிஜி பேசிக்கொண்டிருந்தபோது அந்த இடத்தில் ஆன்மீக அலை பரவியிருந்தது. எங்கள் மத்தியில் இயேசுக் கிறிஸ்துவே நின்று பேசுவது போல் எங்களுக்குத் தோன்றியது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சகோதரி நிவேதிதை, சகோதரி கிறிஸ்டைன் ஆகிய இருவரும் வெளிநாட்டினர். எனினும், இந்திய மக்களின் நன்மைக்காக அவர்கள் அயராமல் தொண்டாற்றினார்கள். அதற்குக் காரணம் என்ன? சகோதரி கிறிஸ்டைன் கூறுகிறார், " சுவாமிஜி இந்தியாவைப் பற்றிப் பேசியபோது எப்போது அவர் திருவாயிலிருந்து 'இந்தியா' என்ற சொல் வந்ததோ, அப்போதே எங்களுக்கு இந்தியாவின் மீது அன்பு பிறந்தது."

ஒருமுறை சுவாமிஜி தமது சொற்பொழிவைப் பற்றி இவ்விதம் கூறியுள்ளார் — "நான் வெறுமனே சொற்பொழிவு செய்வதாகவோ நீங்கள் நினைக்கிறீர்கள்? சொற்பொழிவைக் கேட்பவர்களுக்கு நான் ஆன்மீக சக்தியை வழங்குகிறேன். அதை நான் தெளிவாக உணர்கிறேன். அவர்களும் தாங்கள் ஆன்மீக சக்தி பெறுவதை உணர்கிறார்கள்."

யார் அந்த மாமனிதர்?



அந்தப் பெண் இரஷ்யாவைச் சேர்ந்தவள். தன் இளமைக்காலம் முழுவதையும் இரஷ்யாவிலேயே கழித்தவள். அவள் சிறுவயதில் ஓர் அதிசயக் கனவு கண்டாள். அந்தக் கனவு இதுதான். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பரந்து விரிந்த கடலில் ஒரு கப்பல் மட்டும் தனியாகச் சென்று கொண்டிருந்தது. அதில் அந்தப் பெண் இருக்கின்றாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் எல்லையற்று இருந்த கடலும், காரிருளும் அவளை நிலை குலையச் செய்தன. அதனால் அவள் மிகவும் பயந்து நடுங்கினாள்.

என்ன செய்வது என்று தெரியாமல் அவள் திகைத்துக் கொண்டிருந்த போது, அங்கே ஒருவர் வந்தார். அவருடைய முகத்தில் ஒரு தெய்வீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி வீசியது. அவர் அவளிடம், "பயப்படாதே, இருட்டாக இருந்தாலும் இந்தக் கப்பல் எங்கே போய்ச் சேரவேண்டுமோ, அங்கே சரியாகப் போய்ச் சேர்ந்துவிடும்" என்றார். அதைக்கேட்டதும் அவளுக்கிருந்த பயம் நீங்கியது, தைரியம் பெற்றாள். இந்தக்கனவு முடிந்ததும் அவள் தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டாள். கனவில் தனக்குத் தைரியம் சொன்ன மகானின் முகம் அவளுக்கு நன்றாக நினைவில் இருந்தது.

ஒரு வினாடியில் தன்னுடைய பயத்தை நீக்கிய அந்த மாமனிதர் யார், என்று பிறகு அவள் பல இடங்களில் தேடினாள். இரஷ்யாவிலும், இங்கிலாந்திலும் அவள் அவரைப் பல வருடங்கள் தேடினாள். ஆனால் பயனில்லை. இருந்தாலும் அவள் தன் முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை. தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தாள். இந்த நிலையில் 1895ஆம் ஆண்டு அவள் இங்கிலாந்திற்குச் செல்ல நேர்ந்தது. அங்கே ஓர் இடத்தில், சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த இரஷ்யப்பெண்ணும் சொற்பொழிவைக் கேட்கச் சென்றாள். சுவாமிஜி அங்கு பேசுவதற்காக வந்தார்.


ஓ, என்ன ஆச்சரியம்! அந்தப் பெண் வியப்பில் மூழ்கினாள். பேசுவதற்கு அவளுக்கு நா எழவில்லை! யாரை அவள் பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்தாளோ, அவரேதான் அப்போது "பயமின்மை" என்ற வேதாந்தக் கருத்தை இலண்டன் மாநகரத்தில் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்.



துறவி - இல்லறம் என்றால் என்ன? துறவறம் என்றால் என்ன?

சீடர் - இருந்த இடத்திலிருந்து அறம் செய்வது- இல்லறம்! தூர இடத்துக்குச் சென்று அறம் செய்வது-துறவறம்! சரியா சுவாமி??!!!

துறவி - ஐய்யோ! அப்படி இல்லை......



திருடன் 1 - ஏமாற்றுகிறவர்களுக்கு எப்போதுமே ஏமாறுபவர்கள் கிடைக்கிறார்கள்!

திருடன் 2 - எனக்கு நீ கிடைச்ச மாதிரியா? உனக்கு நான் கிடைச்ச மாதிரியா?

திருடன் 1 - இல்லடா! நம்ம ரெண்டு பேருக்குமே அந்தக் கடவுள் கிடைச்ச மாதிரி!!

# சத்சங்கத்தில்...

## *சமயம் என்றால்?



சுவாமி விவேகானந்தர் கூறுகிறார், சமயங்கள் இன்று நடைப் பிணங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. காரணம், சமயம் என்ற பெயரில் போட்டியும் பொறாமையும் என்பதோடல்லாமல் இரத்தம் சிந்தி, போராட்டமும் நடத்துகிறார்கள்.

மனிதன் உலக இன்பங்களிற்கு அடிமைப்பட்டிருக்கிறான். ஆசை, காமம், குரோதம் என எல்லாவற்றிலும் அடிமைப்பட்டிருக்கிறான், சமயம் என்றால் என்ன என்பதை மறந்துவிட்டான். சமயம் மனிதனுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால், சமயத்தின் நோக்கம், இலட்சியம் எல்லாம் மறக்கப்பட்டு, சமயம் வெறும் கொண்டாட்டமாக, பண்டிகை நாட்களில் உடை உடுத்துவதும், உண்பதும், பட்டாசு சுடுவதுமாக மாறிவிட்டது.

ஒருவன் எந்தளவுக்கு ஆசை, குரோதம், பொறாமை போன்றவற்றைத் துறக்கின்றானோ, அந்தளவுக்கு உயர்கின்றான் வாழ்க்கையில் ஒருவனுக்கு உயர்ந்த இலட்சியம் வேண்டும். உயர்ந்த இலட்சியம் எது? ஒழுக்கம். ஒழுக்கமென்றால் சுயனலமின்மை, பொறாமையின்மையேயாகும். சமயத்தின் நோக்கம் வெறும் இன்பம் அல்ல, சமயமென்பது புத்தகத்திலோ, பண்டிகைகளிலோ அல்ல. சமயப்பாதை, கடினமானது. கஷ்டப்படத் தயாராக இருக்க வேண்டும். ஆனால், அதை நாம் மிகவும் எளிதாக்கிவிட்டோம். வெறும் பண்டிகைகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கத் தொடங்கிவிட்டோம். அத்தோடு சாஸ்திரங்களைப் படித்தால் மட்டும் சமயமாகிவிடாது. சாஸ்திரங்களைப் படிப்பதன் நோக்கம் பண்பை வளர்த்தல். அப்படிப் பண்பை வளர்க்காது சாஸ்திரங்களைப் படிப்பதானது வீணானதே. உதாரணமாக,

ஒருமுறை குருதேவர் தனது சீடர்களுடன் கொன்னகர் என்ற கிராமத்திற்குச் சென்றார். குருதேவரது நகைச்சுவையோடு, அறிவு கலந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சைக் கேட்பதற்கு மக்கள் எல்லோரும் வந்தார்கள். ஏனெனில் அவருடைய பேச்சை ஒருமுறை கேட்டுவிட்டால் போதுமாம். அது மரணத்திற்குப் பின்னும் மறக்க முடியாதாம். அப்பொழுது அவர் எதிரில் ஒரு பிராமணப் பண்டிதர் வந்தார். குருதேவர் அவருக்குத் தனது வணக்கத்தைத் தெரிவித்தார். அதற்குப் பண்டிதர், "எனது வணக்கத்தை ஏற்றுக்கொள்ள உமக்குத் தகுதி இருக்கிறதா?" என்று கேட்டார். அதற்குக் காரணம், குருதேவர் பூணூல் அணியாததே. குருதேவர் அடக்கமானவர், எளிமையானவர், அவர் சில சமயங்களில் சமாதி நிலை எய்தும் போது பூணூல் நழுவி விழுந்துவிடும். ஆனாலும் குருதேவர் அதைப் பொருட்படுத்துவதில்லை.

இவ்வாறு பண்டிதர் கேட்டதும், குருதேவர் "நான் எல்லோரிலும் தாழ்ந்தவன். என்னைவிடத் தாழ்ந்தவன் இங்கு எவரும் இல்லை" என்று மிகவும் வினயத்துடன் கூறினார். இவ்வாறு கதை தொடர்கிறது. பாற்கடலைக் கடையும் போது விஷமும் வந்தது. அதுபோலவே அகங்காரத்துடனும் ஆணவத்துடனும் படிக்கும் சாஸ்திரமானது மமதையை உருவாக்கும்.

நீலவானத்தில் பருந்தும் கழுகும் உயரப் பறக்கின்றன. அவை நினைத்தால் சிறிது உயரப்பறந்து தேவலோகத்தையே அடையமுடியும். ஆனால் அவை அப்படிப் பறப்பதில்லை. ஏனெனில் அவற்றின் இலக்கு, அது அல்ல. பூமியில் வீழ்ந்து கிடக்கும் இறந்த உடல்கள் மீதே அவற்றின் இலக்கு இருக்கிறது. அவ்வாறே மனிதனும் பூமியில் ஆசைகளுக்கும் பாசங்களுக்கும் கட்டுப்பட்டிருக்கிறான். ஆனால் ஆன்மீகத் தாகம் உள்ள மனிதனோ சாஸ்திரங்களைப் படிப்பதன் மூலம் தேவலோகத்தை அடைய முயலுகிறான். நெருப்பிலிடப்பட்ட உறுதியான இரும்பு உருகி, திரவமாகித் தனது கடினத்தன்மையை இழப்பதுபோல, மனிதனும் தன்னகத்தே கொண்டிருக்கும் கர்வத்தை விட்டொழித்தால் அன்றிக் கடவுளை அடைய முடியாது.

* 09 – 12 – 2000 அன்று நடை பெற்ற சத்சங்கத்தில், சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்கள் ஆற்றிய உரை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனக்காடு என்ன ஆச்சு

1

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் மைசூரில் சந்தனமரக்காடுகள் வானளாவி நின்றன. அவ்வழியே தனது வனவளத்தைப் பார்வையிட்டவாறு நாட்டு மன்னன் குதிரையில் வந்து கொண்டிருந்தான்.




2


அப்போது எதிரில் முதிய ஒரு விறகு வெட்டி வருவதைக் கண்டான்.



3

மன்னனைக் கண்ட விறகுவெட்டி விறகுக் கட்டைக் கீழே வைத்து மரியாதை செய்தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7



இவ்வாறு எண்ணியபடி வந்த அரசன் திடீரென அதிர்ச்சியுற்றான். எதிரே விறகுவெட்டி ஒரு கரி மூட்டையைச் சுமந்து கொண்டு வந்தான்.

8



சந்தேகங்கொண்ட மன்னன் அருகேயிருந்த சந்தனமரக்காட்டை நோக்கியபோது ...

9



அங்கு ஓரே ஒரு மரம் தவிர வேறெதுவும் இல்லாததைக் கண்டான்.
காரணத்தை அறிய விறகுவெட்டியை வினாவினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10




இதைக் கேட்ட மன்னன் அதிர்ச்சியுற்றான். அறிவில்லாதவருக்குச் செய்த கொடை வீணே ! என எண்ணி மனம் நொந்தான்.

11




இவ்வாறே இறைவன் நமக்கு மனித வாழ்க்கையான சந்தனக்காட்டைத் தந்துள்ளான். அதில் எமது ஒவ்வொரு மூச்சும் ஒவ்வொரு செயலும் பெறுமதி மிக்க சந்தன மரங்கள். ஆகவே இவற்றை வீணாக்காமல் எமது ஒவ்வொரு செயலையும் ஒழுக்க நெறிப்படுத்தி இறைவனின் திருவடிகளாகிய பெறுதற்கரிய பெருஞ்செல்வத்தைப் பெறமுயல்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நெகிழ வைக்கும் ஒரு உண்மை...

ஹரித்துவார், பிரம்ம குண்டம். கங்கை பூமியின் சமதரையை அடையும் முதல் இடம். கங்கை அங்கு மிக வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு சிறுவன் தன் இடுப்பில் சில தின்பண்டங்களைக் கட்டி அங்கு வரும் மக்களுக்கு வியாபாரம் செய்து தனக்கும், தன் தாய்க்கும், வாழ்க்கையை ஓட்டக்கூடிய சிறிது பணத்தைச் சம்பாதித்து வந்தான்.

ஒரு முறை ஓர் பெரிய மனிதர் தன் மனைவியுடன் ஹரித்துவாரிற்கு யாத்திரையாக வந்தார். திடீரென்று அவருடைய மனைவி, அங்கு வேகமாக ஓடும் கங்கையில் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்டாள். "ஐயோ! யாராவது காப்பாற்றுங்களேன்!" என்று கூக்குரலிட்டார் அப்பெரியவர். அங்கு நின்ற அனைவரும் குழுமி வேடிக்கை பார்த்தபடி நின்றனர். யாரும் காப்பாற்றுவதாகத் தெரியவில்லை. அது போதாது என்று அங்கு நின்றவர்களில் சிலர் "ஓ அவர் சேட்டுத்தானே, அவர் செய்த பாவத்திற்கு அனுபவிக்கிறது, அவர் மனைவி" என்று வேறு அரற்றினர்.

அந்த இடத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்த அச்சிறுவன் இச்சம்பவத்தைக் கண்டான். உடனே, எதுவும் யோசிக்காமல் கங்கையுள் பாய்ந்தான். பெரியவரின் மனைவியைக் கரைக்கு எடுத்து வந்தான். ஒருவாறு காப்பாற்றி விட்டான். பின்னர் கேட்கவேண்டுமா? அனைவரும் அங்கு வந்து குழுமிவிட்டனர். உதவிக்கல்ல, விடுப்புப் பார்க்க. பெரியவரின் உயிரே சென்று வந்தது போல் இருந்தது. தனக்கு உதவி செய்த அச்சிறுவன் யாரெனத்தேடினார் அந்தப் பெரியவர். சூழ்ந்து நின்ற கூட்டத்துக்குள் அவனில்லை. அவன் எங்கே என்று தேடினார்.

எந்த விதமான மாற்றமும் இல்லாமல் பழையபடி தன் வேலையைக் கவனித்தபடி வியாபாரம் செய்து கொண்டிருந்தான் அச்சிறுவன். அந்தப் பெரியவர் ஓடிச்சென்று அவனைக் கட்டித்தழுவி தன் பணப்பையை அவனிடம் கொடுத்தார். "எவ்வளவு வேண்டுமோ தாராளமாக எடுத்துக் கொள்" என்றார். ஆனால் அச்சிறுவனோ, "ஐயா எனக்கும் என் அம்மாவுக்கும், இப்படி வியாபாரம் செய்து சம்பாதிக்கும் பணமே வாழப் போதுமானது, நன்றி" என்று கூறிவிட்டு எதையும் எதிர்பாராதவனாய் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

ஆ! என்னே! பண்பு. ஆசை என்பதோ, எதிர்பார்ப்பு என்பதோ அறவே அற்றது, அச்சிறு தூய மனம். இறைவனைக் கடனாளி ஆக்கும் பண்பல்லவா அது. நாமும் முயற்சி செய்து முதலில் அந்தப் பண்பை வளர்க்க முயல்வோம். பின் இந்தப் பண்பு நம் சுபாவம் ஆகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாப்பா பாப்பா கதை கேளு!

## இறைவனைக் கண்டதுண்டா?



எம் எல்லோருக்கும் கடவுளைக் காணவேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்குமில்லையா? அது மட்டுமல்லாமல் இறைவனை முழுமையாக உண்மையாகக் காணமுடியுமா? என்ற சந்தேகமும் இருக்கலாம். இதே சந்தேகம் ஒரு மாணவனுக்குத் தோன்றியது. அவன் தன் குருவிடம் அறிந்துகொள்ள எண்ணி, "கடவுளைக் காணலாம் என்று எல்லோரும் ஓடுகிறார்களே இது முடியுமா?" என்று நம் வீரத்துறவி விவேகானந்தரை வாட்டிய கேள்வியைக் கேட்டான். உடனே அந்தக் குரு அவனைக் குளத்தருகே அழைத்துச் சென்றார். இருவரும் உள்ளே இறங்கினர். கரையிலிருந்து மெல்ல மெல்ல ஆழமான இடத்திற்கு அழைத்துச் சென்றார் குரு. திடீரென குருவின் செயலை நினைத்துப் பார்க்க முன் சீடன் தத்தளித்தான். மூச்சுத் திணறினான். ஆம் குரு அவனைத் திடீரென மூழ்கச் செய்துவிட்டார். சிறிது நேரத்தில் அவன் திணறி மேலெழுந்தான். குரு பின்னர் விளக்கினார். "நீ மூச்செடுக்க எவ்வளவு திணறினாயோ, மனம் துடித்தாயோ அதே அளவுக்கு மனதில் நீ இறைவனைக் காணத் துடித்தால் இறைவனைக் காணலாம்" என்றால். இதேபோல நாமும் இறைவனைக் காணத் துடிக்க வேண்டும்.

> தான் கேட்பதைத் தருவார்கள் என்ற உறுதியுடன் அல்லவா ஒரு குழந்தை தன் தாய் தந்தையரிடம் கேட்கிறது, அதுபோல உங்களுக்குத் தேவையானவற்றை இறைவனிடம் கேளுங்கள்.
>
> —பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கதி என்ன?



- கண்ணால் கெடுவது விட்டிற் பூச்சி. விளக்கு வெளிச்சத்தைப் பார்த்து அதில் வீழ்ந்து மடிகிறது.
- நாவால் கெடுவது மீன். தூண்டில் முனையில் இருக்கும் புழுவுக்கு ஆசைப்பட்டு நாக்கை நீட்டி தூண்டிலில் மாட்டிக் கொண்டு வெளியே இழுத்து வரப்பட்டு மடிகிறது.
- செவியால் கெடுவது மான். குறிப்பிட்ட குழலோசையைக் கேட்டு ஓசை வந்த இடத்தை நோக்கிச் சென்று மாட்டிக் கொள்கிறது.
- நாசியால் கெடுவது வண்டு. மலரின் மகரந்த மணத்தில் மயங்கி மலரில் மொய்த்து பின்னர் மலர் மூடிக்கொள்ளும் போது மடிந்து விடுகிறது.
- மெய்யால் கெடுவது யானை. குழியில் விழுந்த பெண் யானையிடம் சேர ஆசைப்பட்டு தானும் படுகுழியில் விழுந்து மாட்டிக் கொள்கிறது.
- ஆகவே ஐந்து புலனும் உள்ள நாம் எப்பொழுதும் விழாமல் விழிப்புடன் இருக்கவேண்டும் அல்லவா?



பரிமளம் - இஞ்சருங்கோ ரீ.வீ.யைக் குறையுங்கோவன். பிள்ளை படிக்குதில்லே.

சுந்தரம் - அவனைப் பற்றி எனக்குத் தெரியாதே. ஏதோ சினிமாப் புத்தகமாக்கும்.....

பரிமளம் - அப்பா இப்ப 8.55. 9.00க்கு மின் வெட்டு. அதுதான் கன நாளைக்குப் பிறகு புத்தகம் தூக்கியிருக்கிறான். குழப்பாதேங்கோப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமகிருஷ்ண குடும்பம்




ஆதிசங்கரரின் கூரிய அறிவும், சைதன்யப் பிரபுவின் விரிந்த பக்தி நிறைந்த உள்ளமும், எல்லாச்சமயங்களிலும் நின்று நிலவுவது ஒரே பரம்பொருள்தான் என்ற தெளிவும், எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் இதயமும் தாழ்த்தப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிவுற்ற ஏழைமக்களின் துன்பம் கண்டு அவர்களுக்காகக் கண்ணீர் உகுக்கும் நெஞ்சமும் கொண்டவராக, மனித வடிவில், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணராக இறைவன் அவதாரம் செய்தார். தற்காலக் கலியுகத்திற்கு ஏற்ற ஆக்கபூர்வமான மதத்தைப் போதிக்க வந்த ஸ்ரீராமகிருஷ்ணர் தூய்மையும், மலர்ச்சியும் மிக்கவராக பல உண்மைகளைத் தனது சாதனைகளின் மூலம் கண்டறிந்தார். 'நம்பு' என்று கூறும் மதம் போன்றல்லாமல் 'நான் கண்டேன்', 'உன்னாலும் காணமுடியும்'. 'காண்' என்று உணர்த்தக்கூடிய, விஞ்ஞானபூர்வமான மத உண்மைகளைத் தனது அனுபவத்தின் மூலமாகக் கண்டார். அத்தகைய அனுபவங்களின் தொகுப்பாக ஒரு மூடிய புத்தகமாக, ஆழ்கடலில் மறைந்து கிடந்த முத்தாக இருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை உலகறியச் செய்த பெருமை, சுவாமி விவேகானந்தருக்கே உரியது! காற்று வீசத் தொடங்கியதும், பாய்மரக்கப்பல்கள் பாயை விரித்துப் பயணத்திற்குத் தயாராகுவதுபோல், குருமகராஜின் அருட் காற்று வீசத் தொடங்கியதும், பலர் அவரது அன்புச் சீடர்களானார்கள். அந்தவகையில், ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற புத்தகத்தைப் படித்துச் சுவைத்த அவருடைய சீடர்கள், தமது அனுபவங்களையும் உலகச் சகோதரர்கள் அனைவரும் அறிய தம்மை ஊடகங்களாக அர்ப்பணித்தனர். ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்களை இல்லறச் சீடர், துறவறச்சீடர், பெண்சீடர் என மூன்று வகையாகக் காணலாம். இவர்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள் ஸ்ரீராமச்சந்திர தத்தர், ஸ்ரீமனமோகன் மித்ரர், சுரேந்திரநாத்மித்ரர், கிரீஷ்சந்திரகோஸ், நாகமகாசயர் மற்றும் மகேந்திரநாத்குப்தர் ஆகியோராவர். ஒவ்வொருவருமே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். இவர்களில் சிலரது முந்தைய வாழ்வு, சுக போகங்கள் மட்டுமே மனித வாழ்க்கை என்று, எதுவிதக் குறிக்கோளும் அற்றதாக இருந்தது. ஆனால், மானிடப்பிறவி என்ற மகத்தான பரிசை இறைவன் எமக்கு அளித்தது, நாம் நமது உண்மை இயல்பை அறிந்து கொள்வதற்கே என்பதை ஸ்ரீராமகிருஷ்ணரின் தாய்மை நிறைந்த அன்பு என்ற நிழலுக்குக் கீழே வந்ததும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். தமது வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளுக்குரிய பாதையைக் காட்டிய குருதேவரிடம் சரணடைந்தனர். பெண்கள் அனைவரையும் இறைஅன்னையின் வடிவமாகக் கண்ட பரமஹம்ஸருக்கு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அறிவு மிகுந்த ஸ்ரீகௌரிமா, மெய்யுணர்வுமிக்க யோகின்மா, துணிச்சல் மிக்க ஸ்ரீ கோலப்மா, தாயுணர்வுள்ள ஸ்ரீ அகோரமணி எனப்படும் ஸ்ரீ கோபாலர்மா, போன்ற பல பெண் சீடர்களும் இருந்தனர். இவர்கள் தவிர, ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தையும், மடங்களையும் நிறுவி நிலைநிறுத்தத் தோன்றிய துறவறச் சீடர்கள் பதினாறு பேர்! இப் பதினாறு செல்வங்களும், ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஒருங்கே சிறந்து விளங்கிய வெவ்வேறு ஆற்றல்கள், குணநலங்கள் ஆகியவற்றின் தனித்தனி முழு வடிவங்களாகத் திகழ்ந்தனர். குருதேவரின் அருகிலிருந்தே, ஆன்மீகச் சாதனைகளைச் செய்து இச் சீடர்கள் தாம் பெற்ற உண்மை நிறைந்த பல அனுபவங்களை எட்டுத் திக்கெங்கிலும் சென்று பரப்பியமை, நாகரீக மோகம் நிறைந்த பல மேல் நாட்டவர்களையும் பணிவும், கருணையும் மிக்க ஆன்மீக சாதகர்களாக்கியது! இதுவே இந்திய மக்களின் வாழ்க்கைக்குத் தன்னையே அர்ப்பணித்த மேல்நாட்டு இளம் பெண் 'சகோதரி நிவேதிதையாக' மலரவும், இந்தியர்களை ஆட்டக் காய்களாக ஆக்கி, அடிமைகளாக விளையாடிக்கொண்டிருந்த பிரித்தானியக் காலத்தில், ஆயுதம் தாங்காத சுதந்திர வீரனாக நின்று பாரததேச மக்களுக்கு சுயவுணர்வையூட்டிய ஒரு பாரதியைத் தட்டி எழுப்பவும் உறுதுணையாக அமைந்தது! ஸ்ரீ இராமர் உலகிலே தர்மத்தை நிலைநிறுத்த சீதாதேவியையும், தனது அம்ச அவதாரங்களான இலக்குமண, பரதசத்ருக்கனர்களையும் எப்படி அழைத்து வந்தாரோ, ஸ்ரீகிருஷ்ணர் தர்மத்தைப் போதிக்க அர்ஜுனனை எங்ஙனம் அவதரிக்கச் செய்தாரோ, இயேசுக்கிறிஸ்து நாதர் தன்னுடைய போதனைகளை உலகறியச் செய்ய சீடர்களை உருவாக்கி எவ்வாறு தனது விட்டுச் சென்றாரோ அவ்வாறே, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதார மகிமையையும் அதன் தத்துவத்தையும் இந்தக் கலியுகத்தில் வாழும் நவீனயுக மக்கள் உணரவேண்டுமென்றே, இறைவன் தன்னுடன் இவ்வளவு பேரையும் அழைத்து வந்துள்ளார்! ஆகவே ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற கடலில் ஒவ்வொரு துளியாக விளங்கும் இந்த இறை தூதர்களின் வாழ்க்கைச் சரித்திரத்துக்குள் உங்களை அழைத்துச் செல்கிறோம்.












தொடரும்...



சமய ஆசிரியை - எமது வாழ்வின் உயர்ந்த இலட்சியம் என்ன?

மாணவன் - மிஸ்! எனக்கு வைத்தியனாவது இலட்சியம் மிஸ்!

சமய ஆசிரியை - இல்லை பிள்ளை உயர் இலட்சியம் இறைவனை அடைவது!

மாணவன் - (மனவேதனையுடன்) அப்ப... என்ரை வைத்தியனாகும் கனவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம்

எனது வீர இளைஞர்களே!

நாடானது, குடிசைகளில்த்தான் வாழ்கிறது என்பதை நினைவில் வையுங்கள். ஆனால், அந்தோ! அவர்களுக்காக யாரும் எதையும் எப்போதும் செய்ததில்லை. உங்களால் அவர்களை உயர்த்தமுடியுமா ?

உங்களிடம் நம்பிக்கை வையுங்கள், திடமான நம்பிக்கைகளே பெரும் செயல்களிற்கு வழிவகுக்கின்றன. தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள். ஏழைகளிடமும், தாழ்த்தப்பட்டோரிடமும் இரக்கம், மரணமே வந்தாலும் இரக்கம் — இதுவே நமது குறிக்கோள்...

வேலையைச் செய்யத் தொடங்குங்கள். அதற்கான வேகத் தீ உங்களை வந்தடையும். தைரியம் மிக்க என் இளைஞர்களே! நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள். தைரியம் மிக்க, சுயனலமற்ற என் குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறீர்கள். நான் உங்களைப் பற்றி பெருமை கொள்கிறேன். தங்கள் பணியைச் செய்து முடிப்பதற்காகத் தீயில் குதிக்க வேண்டியது அவசியமானால், அப்படியே செய்வதற்கும் என் குழந்தைகளே! தயாராக இருக்க வேண்டும்.

நீங்கள் உண்மையில் என் குழந்தைகளானால், எதற்குமே அஞ்சமாட்டீர்கள். சிங்கங்களாகத் திகழ்வீர்கள். உலகம் முழுவதையும் நாம் விழித்தெழச் செய்ய வேண்டும். கோழைத்தனம் கூடவே கூடாது. உயிரே போவதானாலும் நேர்மையுடன் இருப்பீர்களாக.



வீரச்செல்வங்களே, முன்னேறுங்கள் !

உங்கள் அன்புள்ள

Vivekananda

சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நிகழ்ச்சிகள்?

## பஜனை, தியானம், ஆராதனை

1. வெள்ளிக்கிழமை மாலை விசேட பஜனையும் ஆராதனையும், எம் செவிப்புலனை இறைவழிப்படுத்தும் பொருட்டு நடைபெறுகிறது.
2. பூரணை தினங்களில் பஜனை, தியானம், ஆராதனை, மானசபூஜை என்பன சாதுக்களுடன் சேர்ந்து நடைபெறும். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியவாறு நம் ஆன்மீக வாழ்வின் முன்னேற்றத்திற்கு இப்படியான சத்சங்கம் மிக அவசியம்.
3. ஏகாதசி தினங்களில் இராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும். "எங்கெல்லாம் ராம நாமம் சொல்லப்படுமோ அங்கெல்லாம் ஸ்ரீஹனுமான் இருப்பார்" என்பதைப் பிரத்தியட்சமாய்க் கண்டவர் சுவாமி பிரம்மானந்தர். ஆகவே நாமும் ஸ்ரீராமரினதும், பக்த ஹனுமானினதும் அருளைப் பெற நாம சங்கீர்த்தனம் செய்வோம்.
4. திரிமூர்த்திகள் ஜெயந்தி அன்று, அதிகாலை முதல் விசேட பூஜை, பஜனை தியானம், பாராயணம், ஹோமம் என்பன மூலம் மனதைத் தூய்மைப்படுத்தி இறை வழி செலுத்த ஒரு சந்தர்ப்பம்.

- சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி 15 — 01 — 2001
- குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜெயந்தி 25 — 02 — 2001

## வகுப்புகள்

1. ஞாயிறு தோறும் — ஞாயிறு பாடசாலை
2. சனிக்கிழமை மாலை — குருதேவரின் அமுதமொழிகள் (ஆங்கில வகுப்பு)
3. ஞாயிறு மாலை — பகவத் கீதை விளக்கம் (தமிழ் வகுப்பு)
4. சனிக்கிழமை காலை — தொண்டர் வகுப்புகள்.
5. அவ்வப்பொழுது இளைஞர் முகாம்கள் (வெளியிடத்து மாணவர்ளுக்கு)

## ஜீவ சேவையே சிவ பூசை

1. இலவச மருத்துவமுகாம் — ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில்
2. அவ்வப்போது வெளியிடங்களில் மருத்துவ முகாம்கள்
3. வறிய மாணவர்களுக்குப் புத்தகம், உடை வழங்கல்
4. அவ்வப்போது ஆசிரியர் பயிற்சி முகாம்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீலத்தின் நிர்மாணம்

ஒரு மனிதன் நல்ல எண்ணங்களையே எண்ணி, நற்செயல்களையே செய்து வந்தால் அவன் மனதில் நல்லனவையே பதிந்து, அவை அவனையறியாமலேயே அதைப் போன்ற நல்லதைச் செய்ய அவனைத் தூண்டும். ஒரு மனிதன் ஏராளமான நல்ல செயல்களையும், ஏராளமான நல்ல எண்ணங்களையும் கொண்டிருந்தால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்யவேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது. அவனாக தீயனவற்றைச் செய்யவேண்டுமென்று விரும்பினாலும் நன்மையின் மொத்த வடிவமாக உள்ள அவனது மனது அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டு விடுகின்றான். இவ்வாறு அமையும் பொழுதுதான் ஒரு மனிதனின் சீலமானது (நல்ல பண்பானது) நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. நீ உண்மையிலேயே ஒரு மனிதனின் சீலத்தைத் (பண்பைத்) தீர்மானிக்க விரும்பினால் அவனுடைய அரும்பெருஞ்செயல்களைக் காணாதே. ஒரு மனிதனின் மிகச் சாதாரணமான செயல்களையே கண்காணித்து வா. உண்மையில் அவை தாம் ஒரு பெரிய மனிதனுடைய உண்மையான சீலத்தை உனக்கு வெளிப்படுத்தும்.

நீ சீலத்தை (நல்ல பண்பை) நிர்மாணித்துக்கொள். அத்துடன் ஒளிமயமான, பிரகாசிக்கின்ற, என்றும் தூய்மையான உனது உண்மையான இயல்பை வெளிப்படுத்து. மேலும் நீ, காணும் ஒவ்வொருவரையும் அக்கண்ணோட்டத்துடனேயே காண்பாயாக.

– *சுவாமி விவேகானந்தர்*


□ □ □ □ □

பிரார்த்தனை

1. எனது உடலும் இந்திரியங்களும் பரிசுத்தமாகட்டும், உறுதியாகட்டும்;
2. எனது மனமும் புத்தியும் தூய்மையாகட்டும், திடமாகட்டும், ஒளிபொருந்தியதாகட்டும்;
3. எனது உள்ளம் அமைதி, அன்பு, மற்றும் ஆனந்தத்தால் நிறையட்டும்;
4. எனது வாழ்க்கை சக்தியும், ஆர்வமும் நிறைந்ததாக அமையட்டும்; அத்துடன் ஆளுமைவிருத்தியிலும், தன்னலமற்ற மக்கட் சேவையிலும் எப்போதும் ஈடுபடுவதாக அமையட்டும்;
5. இவை அனைத்தையும் அடைவதற்கு, இறையருள் என்றும் எனக்குத் துணைபுரிவதாக; அவரது தெய்வீக – ஒளி என்றும் என்னை வழிநடத்தட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உங்கள் பக்கம்



மாணவர்களே!

முன்னட்டையில் போடப்பட்டுள்ள படம் மிக ஆழமான பண்பை உணர்த்தும் ஒரு கருத்தை உடையது. அக்கருத்து என்ன என்பதை ஒரு தபாலட்டையில் எழுதி கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

புதிர் விடைகளுக்கான இறுதித்திகதி – 28.02.2001

சிறந்த கருத்துக்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். அத்தோடு, ஒரு சிறு அன்பளிப்பும் காத்துள்ளது. எனவே உங்கள் பெயர்,வகுப்பு, முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள்.!

உங்கள் வாழ்வில் சீரிய பண்பு வெளிப்பட்ட உருக்கமான சம்பவங்கள் இருப்பின் அதை எமக்கு தெரியப்படுத்துங்கள். எம் இதழில், 'நெஞ்சை நெகிழ வைக்கும் ஒரு உண்மை...' என்ற தொடரில் அவற்றில் சிறந்தவற்றை வெளியிடுவோம். இதில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கான வயதெல்லை 10 முதல் 20 வரையானதாகும். இக்கட்டுரைக்களுக்கான முடிவுத்திகதி 28.02.2001.

இந்நூல் எமது புதிய முயற்சி. இந்நூல் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தாழ்மையுடன் எதிர்பார்க்கிறோம். உங்கள் கருத்துக்களே எமது முன்னேற்றத்திற்கான படிக்கற்கள்! எனவே உங்கள் உயரிய கருத்துக்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

நீங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:-

'அறநெறி அமுதம்' ஆசிரியர் குழு,
இராமகிருஷ்ண மிஷன்,
40, இராமகிருஷ்ணா வீதி,
கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விவேகானந்தரின் அறைகூவல் !

மனிதர்கள் மனிதர்கள்தான் வேண்டும். மற்றவை எல்லாம் தயாராகிவிடும். வலிமை மிக்க, ஆண்மையுள்ள, நம்பிக்கை வாய்ந்த, குருத்தெலும்புவரை மனப்பூர்வமாகப் பணிபுரியத்தக்க இளைஞர்கள் வேண்டும்.

இலட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் பணியாற்ற முன்வருவர். அவர்களிடம் புனிதத்தன்மையும் உற்சாகமும் நெருப்பென ஒளி வீசும். பரம்பொருளிடம் கொண்ட ஆறாத நம்பிக்கையால் அவர்கள் பலம் பெற்றிருப்பார்கள். ஏழைகள், வீழ்ச்சியுற்றோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடம் கொண்ட நல்லெண்ணத்தால் சிங்கமெனத் தைரியம் கொண்டிருப்பார்கள். இந்த் இலட்சக் கணக்கான தொண்டர்கள் நாடெங்கும் சென்று மோட்சம் என்ற நற்செய்தியைப் பரப்புவார்கள், பரோபகாரம் என்ற நற்செய்தியைப் பரப்புவார்கள், சமூக எழுச்சி என்ற நற்செய்தியைப் பரப்புவார்கள், சமத்துவம் என்ற நற்செய்தியைப் பரப்புவார்கள்.

- சுவாமி விவேகானந்தர்.

Printed By CHEMAX

விலை ரூபா. 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org